மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. சுப்புராயர் : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கூடலூரில் லோயர் கேம்ப் என்ற ஒரு கிராமம்—13-வது வார்டில் அடங்கியுள்ளது. அங்கே 2000-க்கு மேற்பட்ட கிராமப்புற மக்கள் வசிக்கிறார்கள். அந்தக் கிராமம் பேரூராட்சியில் அடங்கியிருப்பதால் கிராமப்புறங்களுக்கு வழங்கக்கூடிய அரசு சலுகைகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே, லோயர் கேம்ப் கிராமத்தை கூடலூர் பேரூராட்சியி லிருந்து பிரித்து தனியாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று விரும்பினால், அதற்குள்ளே அடங்கியிருக்கிற பகுதியைப் பிரிக்கச் சொல்லக் கூடாது. அப்படி பிரித்தால் அது பேரூராட்சியாகத்தான் இருக்கும். சில நேரங்களில் பேரூராட்சி சாதாரண ஊராட்சியாக மாறிவிடவும் கூடும். ஆகவே, உறுப்பினர் அவர்கள் அதை நகராட்சியாக ஆக்கவேண்டுமென்று விரும்புகிறாரா அல்லது அவர்கள் குறிப்பிட்ட பகுதியை பேரூராட்சியிலிருந்து பிரிக்க வேண்டுமென்று விரும்புகிறாரா என்று முடிவு செய்து, தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு உரிய பதில் அளிக்கப்படும்.

கமுதி மகப்பேறு மருத்துவமனைக்குப் பெண் மருத்துவர்.

39—(*வினா எண் 3757) திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மகப்பேறு மருத்துவமனைக்குப் பெண் மருத்துவ அதிகாரி நியமிக்கப்படவில்லையா?

1987 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவ அதிகாரியை நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மகப்பேறு மருத்துவமனைக்கு பெண் மருத்துவ அதிகாரி ஒருவரைப் பணிய மர்த்தி 26—3—1987 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. கே. முத்துவேல்: தலைவரவர்களே, கமுதி மருத்துவ மனையில் நீண்ட நாட்களாக பெண் மருத்துவர் கிடையாது. அங்கே ஆறு மருத்துவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தும் ஒரே ஒரு மருத்துவர்தான் பணியாற்றுகிறார். பக்கத்தில் இருக்கிற பரமகுடியிலிருந்து பெண் மருத்துவர் ஒருவர் 'டெபுடேஷன்' முறையில் நியமிக்கப்பட்டார். அந்த மருத்துவரும் லீவில் போய்விட்டார். இதைக் கருத்திற்கொண்டு உடனடியாக அந்த மருத்துவ மனைக்கு டாக்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பொது வாக நம்மிடம் டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் சர்வீஸ் கமிஷன் டாக்டர்களைத் தேர்வு செய்து அனுப்ப வேண்டு மென்று கேட்டிருக்கிறோம். விரைவில் தேர்வு செய்து மூன்று மாதங்களுக்குள் பட்டியலைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பட்டியல் கிடைத்தவுடன் மருத்துவர்கள் இல்லாத இடங் களில், ஆங்காங்கே நியமிக்கப்படுவார்கள்.

திரு. கே. முத்துவேல்: தலைவரவர்களே, மருத்துவர்கள் கிராமப் புறங்களில் சென்று பணியாற்ற விரும்பாமல் இருக் கிறார்கள். ஆகவே ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கட்டாய மாக மூன்றாண்டுகள் பணியாற்ற வேண்டும் என்று அரசு ஆணை யிட்டிருப்பது போல கிராமப்புறங்களிலும் கட்டாயமாக மருத் துவர்கள் பணியாற்ற வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அரசு மருத்துவத் துறையில் மருத்துவர்களைச் சேர்க்கின்றபோதே அவர்கள் தொடக்கத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் கட்டாயம் குறிப்பிட்ட காலத்திற்குப் பணியாற்ற வேண்டுமென்று நிபந்தனை விதித்து, அவர்களும் அவ்வாறு பணியாற்றி வருகிறார்

கள். ஆகவே மருத்துவர்களை நியமிக்கின்ற இடங்களில், கிராமப பகுதிகளில் அவர்கள் பணியாற்றத் தவறுவார்களானால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அரசுப் பணியிலிருந்து நீக்க வும் அரசாங்கம் தயங்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித் துக் கொள்கிறேன்.

வாலாஜா அரசு மருத்துவமனை.

40—(* வினா எண் 9556) திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா அரசு மருத்துவமனையில் உள்ள ஆபரேசன் தியேட்டரும் படுக்கைகளைக் கொண்ட படுக்கைக் கட்டிடமும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) இம் மருத்துவமனையில் பெண்கள் வார்டு ஒதுக்கப் பட்ட வார்டு (Isolation Word) கட்டிடங்கள் பழுதடைந் துள்ளன. ஒதுக்கப்பட்ட வார்டினை ரூ. 30,000 மதிப்பீட்டில் செப்பனிட, பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. 28—7—1987 தேதியிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசு ஆணை எண் 1443-ல் ரூ. 3.49 இலட்சம் மதிப்பீட்டில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. மா. கதிர்வேலு: தலைவரவர்களே, மகப்பேறு பிரிவுக்குக் கட்டடம் கட்டுவதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது 20 படுக்கைகள் கொண்ட வார்டுதான் உள்ளது. அந்தப் பகுதியிலே ஒரு நாளைக்கு ஆயிரம் வெளி நோயாளிகள் வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் சாலை விபத்துக்களும் அதிகமாக இருப்பதால் படுக்கைகளை அதிகப்படுத்தவும் ஒரு விபத்து வார்டு கட்டுவதற்கும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 20 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்ட இப்போதுதான் அனுமதி அளித்திருக்கிறோம். அது கட்டி முடிக்கப்பட்ட பிறகு இது குறித்து பரிசீலனை செய்யலாம்.